சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத ,, ,, 4-50
3 மாத ,, ,, 2-25
(தபாற் செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

அயலார்க்கு அன்பு செய்வதில ஆனந்தம் காண்பவனே உண்மையில் இன்பம் துய்ப்பவனுவான்.

— ஓர் அறிஞர்

94-ம் புத். | 1969-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 8-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 43-ம் இல.

## "சினொட்" சபையின் முடிபு

சென்ற இரு வாரங்களாக வத்திக்கானில் கூடிவந்த மேற்றிராணிமாரின் சினொட்சபை முடிவுபெற்றுள்ளது. வருங்காலத்தில் கத்தோலிக்க மக்களின் பல உறுப்பினரும் ஒருவரோடொருவர் முன்னிலும் கூடிய முறையில் தொடர்பு கொண்டு ஒன்றித்துத் தேவனின் போதனையைச் சிறப்பாகப் பரப்ப வேண்டுமென்ற ஏகோபித்த மனப்பான்மையுடன் சினொட்சபை முடிவுற்றது. மேற்றிராணிமார் அடிக்கடி ஒன்றுகூட வேண்டுமென்பதும், உலக மேற்றிராணிமாரின் பிரதிநிதிச் சபையாக ஒருசிறு குழு நிரந்தரமாக வத்திக்கானில் தொண்டாற்ற வேண்டுமென்பதும், மக்களுக்கும் குருமாருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென்பதும் முக்கிய முடிபுகளாம்.

## வண. சாள்ஸ் எஸ். மத்தியூஸ் O. M. I. சுவாமியாரின் மறைவு

யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் காலங்கண்ட குருப்பிரசாதியும், சம்பத்திரிசியார் கல்லூரியின் நெடுங்கால அதிபரும், சிறந்த கல்விமானுமான வண. சாள்ஸ் எஸ். மத்தியூஸ், O. M. I. சுவாமியார் போதிலும் தமது சிரேஷ்டரின் கட்டளைக்குப் பணிந்து 1903 ஆவணி 6-ம் தேதி யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து சம்பத்திரிசியார் கல்லூரியில் சில காலம் கடமையாற்றிய பின் 1905இல் தமது 26-ம்



நிகழும் கார்த்திகைத் திங்கள் 1-ஆம் தேதி தமது 91-ம் வயதில்கொழும்புத் துறையிலுள்ள அமலோற்பவ தியாகிகளின் மனையில் காலமாயினர்.

குரவர் 1879-ம் ஆண்டு வைகாசி 27-ம் தேதி பிரான்சிய நான்சி மேற்றிராசனத்திலுள்ள மசெயின் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் பிதா பிரான்சு தேசத்தவர். மாதா ஓர் ஆங்கில மாது. இங்கிலாந்து, பிரான்சு, பெல்ஜியம் தேசங்களிலே இவர் கல்விகற்றபின் கனடாவிலுள்ள ஒற்ருவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்து தமது சீவியத்தைத் தேவனுக்கு அர்ப்பணிக்க நிச்சயித்தார். 1902இல் வைகாசி 24-ம் தேதி குருத்துவாபிஷேகம் பெற்ருர்.

ஆபிரிக்காவிலே தேவ பணியாற்றுவது குரவரின் ஆரம்ப நோக்கமாயிருந்த பராயத்தில் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்ருர். சம்பத்திரிசியார் கல்லூரியுடனுன இத்தொடர்பு 33 வருடங்களுக்கு நீடித்திருந்தது. சுவாமியாரின் நிகரற்ற ஊக்கத்தினுலும், எல்லோரையும் அதிசயிக்கவைக்கும் துணிகரமான விடாமுயற்சியினுலும், நிர்வாகத்திறமையினுலும், தேவனிலுள்ள தளராத நம்பிக்கையினுலும் சம்பத்திரிசியார் கல்லூரி அவர் அதின் அதிபராக இருந்த காலத்திலிருந்தே உச்சநிலையை அடைந்தது. கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்துக்காகவும், ஆசிரியர் மாணவரின் நன்மைக்காகவும் அவர் பல வருடங்களாக எடுத்த வெவ்வேறு முயற்சிகளையும், பட்டபாடுகளையும் இங்கு எடுத்துக் கூறுவது இயலுங் கருமமன்று.

1936இல் சம்பத்திரிசியார்கல்லூரியின் பொறுப்பிலிருந்து விலகியபின் முதலில் மன்ஞர் புனித சவேரியார் கலாசாலையினதும் பின்பு இளவாலை

(தொடர்ச்சி 2-ம் பக்கம்

## இருதய மாற்றுச்செய்த குரு மரணமானர்

வேறு ஒருவரின் இருதயத்தை வைத்தியரின் ஆலோசனைப்படி சேர்த்துக் கொள்வது இன்று புதினமல்ல. ஆனுல் இம்முறை இருதயமாற்றுச் செய்துகொண்டமுதல் கத்தோலிக்ககுருவானவர் வணக்கத்துக்குரிய சாள்ஸ்பூலோங்அடிகளாரே. இவர் பிரான்சுதேசத்தைச் சேர்ந்தவர். மாற்று இருதய சிகிச்சையை இவர் 1968-ம் ஆண்டு மே மாதம் செய்வித்துக்கொண்டார். படிப்படியாகக் குணமடைந்துவந்த குருவானவர் சென்றவாரம் திடீரென கடுநோயுற்றுக் காலஞ்சென்ருர். மரணமான போது இவருக்கு வயது 57.

## தற்போதைய கல்விமுறை பயனளியாது

உலகவங்கி உயர் உத்தியோகஸ்தரும், தென் கிழக்கு ஆசிய பொருளாதார விவகார விற்பன்னருமாகிய திரு. புளொபெல் இலங்கையில் தற்போது கையாளப்படும் கல்வி முறை எமது நாட்டுக்குப் பயன் அளியாது என அன்று கூடிய பத்திரிகை நிருபர் மகாநாட்டில்விளக்கிக் காட்டினுர். எமது பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறும் மாணவர்களில் பெரும்பாலாஞேர் வேலையின்றி இருக்கின்றனர் என்ற காரணம் ஒன்றே எமது கல்விமுறையின் உதவாத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது என்பது அவரது அபிப்பிராயம். நாட்டின் பொருளாதாரத் துறையில் ஏதோஒருமுறையில் பங்கு பெற்றுக்கொள்ளப் பள்ளிக்காலத்திலேயே மாணவர் பயிற்சி அளிக்கப்படத்தக்க நல்ல கல்விமுறை நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வற்புறுத்துகின்ருர்.

## கனடாவும் வத்திக்கானும்

வத்திக்கானில் உள்ள கனடா தேச அரசாங்கப் பிரதிநிதியின் அந்தஸ்தை உயர்த்தி அங்கு ஒரு விசேஷ தூதுவரை நியமிக்கக் கனடாதேசப் பிரதம மந்திரியாகிய திரு. பியறே ரியூடோ முடிவுசெய்திருக்கின்ருர். வத்திக்கானில் உள்ள தூதுவரின் வரிசையை உயர்த்துவதினுல் உலக சமாதானத்துக்கு முன்னிலும் கூடிய முறையில் சேவை செய்யச் சந்தர்ப்பங்கள் உண்டாகும்என்பதே இம் முடிவுக்குப் பிரதமர் வந்த காரணமாகும்.

## புல்ரன்ஷீன் அடிகளார் ஓய்வுபெறுகின்ருர்

பிரசங்கியாகவும், கத்தோலிக்க சமய எழுத்தாளராகவும், பெரும் சமய அறிவாளியாகவும் விளங்கிவரும் புல்ரன்ஷீன் அடிகளார் அமெரிக்க தேசத்திலே, நியூயோர்க் பிரதேசத்திலே, ருெசெஸ்ரர் நகரிலே சென்ற சில வருடங்களாகவே மேற்றிராணியாராகக் கடமையாற்றி வந்திருக்கின்ருர். ஆனுல் தம்முடைய ஆயர் பதவியிலிருந்து தமக்கு ஓய்வு தரும்படியாக அண்மையில் பாப்பரசருக்கு வேண்டுகோள்செய்து தமது விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டார். தாம் நல்ல சுகதேகியாய் இருப்பதாகவும் முன்செய்துவந்ததுபோல் பிரசங்கங்கள் செய்யவும், புத்தகங்கள் எழுதவும் தமக்குள்ள விருப்பத்தின் காரணமாக ஆயர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாகவும் அவர் கூறியிருக்கின்ருர்.

## புனித மத்தேயு சுவிசேஷ சினிமாப்படத்துக்கு உயர் பாராட்டு

இலங்கை சினிமாப்பட விமர்சகர் சங்கத்தினரின் அழைப்பின்மேல் இலங்கைக்குச் சென்றவாரம் வந்திருந்த உயர் விமர்சகர் திரு. சிந்தானந்த தாஸ் குப்தா மக்களிடையே சமயப் படங்கள் செய்துவரும் பெரும் நன்மைகளை மிகவும் பாராட்டினுர். அண்மையில் வெளிவந்த புனித மத்தேயு சுவிசேஷ சினிமாப்படம் மிகவும் உயர்தரமான படமெனவும், தான் பார்த்த படங்களுள் மிகத் திறமான படங்களுள் ஒன்றெனவும், ஒவ்வொருவரும் பார்த்து நன்மை பெறக் கூடியதெனவும் வாயாரப் புகழ்ந்தார்.

## தொடர்பு சாதனங்களும் சமய வளர்ச்சியும்

இலங்கையின் பலமேற்றிராசனங்களிலுமிருந்து கத்தோலிக்க மக்கள் கொழும்பு புனித பிறிஜெட்ஸ் கல்லூரியில் ஒன்றுகூடிச் சென்ற 24-ம் 25-ம் திகதிகளில் மக்களின் தொடர்புச் சாதனங்களை சமயவளர்ச்சிக்கு எவ்வாறு உபயோகிக்கலாமென ஆலோசனை நடத்தப்பட்டது. புதினப் பத்திரிகைகள், புத்தகங்கள் சஞ்சிகைகள் துண்டுப் பிரசுரங்கள், வானெலி முதலியன மறுதேசங்களில் செய்துவரும் அரிய தொண்டுகள் பற்றியும் எமது நாட்டில் செய்யக்கூடிய சேவைகளைப்பற்றியும் பலர் உபந்நியாசம் செய்தார்கள்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. (Ordinary Level)

# கிறீஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

— சிஸ். அன்ரனி யோசவ் —

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

### வினு 10.

**சதுசேயர் என்பவர்கள் யார்? நமது ஆண்டவரிடம் அவர்கள் கேட்ட கேள்வியாது? அவர் கொடுத்த பதில் என்ன? உத்தானத்தையிட்டுத் திருச்சபை நமக்குப் படிப்பிக்கும் போதனை என்ன?**

( முன் தொடர்ச்சி )

ii. உத்தானம் இல்லையென்று நம்பிய சதுசேயர் நமதாண்டவரிடம் கேட்ட கேள்வி யாதெனில், (20 : 27) "இவ்வுலகில் ஒரு ஸ்திரி ஏழு சகோதரர்களை ஒன்றன்பின் ஒன்ருக மணந்தபின்பு புத்திர சந்தானம் இல்லாமல் அவர்கள் இறந்தனராயின் மறுசீவியத்தில் ஏற்படும் உத்தானத்தில் இவள் யாருடைய மனைவியாக இருப்பாள்?" என்பதாம். அதற்கு நமதாண்டவர் "உத்தானத்தில் வாழ்க்கைப்படுகிறதுமில்லை, பெண கொள்ளுவதுமில்லை" என்ருர். அங்கு எல்லோரும் சர்வேசுரனுடைய பிள்ளைகளென்ற உறவைமாத்திரம் கொண்டாடுவார்கள். அங்கு ஒரே நிகழ்காலமாய் இருப்பதனுல் இறந்தகாலத்தில் ஏற்பட்டஉறவு கொண்டாடப்படமாட்டாது.

iii கத்தோலிக்க திருச்சபையானது

(அ) மாமிச உத்தானம் உண்டென்றும் நித்தியசீவியம் உண்டென்றும் போதிக்கின்றது. இப்போதனைகள் பின்வருவனவற்றை வேதாகம ஆதாரமாகக் கொண்டுள்ளன. "(மாணித்து) பூமியின் தூசியிலே நித்திரை செய்கிறவர்களில் அநேகர் நித்திய சீவனுக்கும், வெகுபேர் நித்திய நிந்தைக்கும் எழுந்திருப்பார்கள்" (தானியேல் 22/2).

"அப்பொழுது நற்கிரிகைகளைச் செய்தவர்கள் உயிர்த்துச் சீவியத்துக்கும் துர்க்கிரிகைகளைச் செய்தவர்கள் உயிர்த்து ஆக்கினைத் தீர்வைக்கும் புறப்படுவார்கள்."

(அருள். 5/29

"என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய சீவியம் உண்டு. கடைசிநாளிலே நான் அவனை உயிர்ப்பிப்பேன்" (அருள் 6/55)

கத்தோலிக்க திருச்சபையானது தூயஆவியினுல் ஏவப்பட்டு தனது விசுவாச சத்தியங்களில் இக்கோட்பாட்டைப் போதிக்கின்றது. அதன் திருவழிபாட்டிலும சங்கீதங்களிலும் இவ்வுண்மையைப் பல தடவைகளில் ஞாபகப்படுத்துகின்றது.

நியாயமானது பின்வருவனவற்றைப் படிப்பிக்கின்றது—

(அ) ஆன்மா நித்திய சம்பாவனையையோ அன்றேல் ஆக்கினையையோ பெறுமாயின் ஆன்மாவுக்கு உடலாயிருந்த சரீரமும் அதே கதியை அடைய வேண்டுமென்பது நியாயமே.

(ஆ) ஆன்மா தான் குடியிருந்த உடல்மீது இயற்கையான ஆவலும் அன்பும்கொண்டுள்ளது. ஆகையால் இவ்வாவல் நித்தியத்துக்கும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கமுடியாது.

(இ) பிறமதத்தோரும் இக் கோட்பாடு இயற்கைக்கு அடுத்ததென ஏற்றுக் கொள்கிருர்கள்.

### ஆன்மாவின் அழியாத் தன்மை

வேதாகமத்திலிருந்து சான்றுகள் :

1. உயிர்த்தெழுதலைப் பிரமாணிக்கமாயும் விசுவாசத்தோடும் நினைவுகூர்ந்து பணம் தண்டிப் பன்னீராயிரம் வெள்ளித் திராக்மாக்களை மரித்தவர்களுடைய பாவங்களுக்காகப் பலி ஒப்புக்கொடுக்கும்படியாக ஜெருசலேமுக்கு அனுப்பினுன்.

(2-ம் மெக்காபியர் 12 : 43.)

"மரித்தவர்கள் மீண்டும் சீவிக்காவிட்டால் அவர்களுக்காக மன்ருடுவது விழல்."

2. இவ்விதமாக இவர்கள் நித்திய ஆக்கினைக்கும், நீதிமான்களோ நித்திய ஜீவியத்திற்கும் போவார்கள் என்று திருவுளம்பற்றினுர்.

(மத். 25 : 46.)

3. வழுவாவரம் கொண்ட கத்தோலிக்க திருச்சபையானது ஆன்மாவின் அழியாத் தன்மையைப் பற்றிய வேத சத்திய கோட்பாட்டை எப்பொழுதும் படிப்பிக்கின்றது.

4. நியாயமானது பின்வருமாறு எமக்குக் கற்பிக்கின்றது:

(அ) நித்திய வாழ்வை மனிதன் இயற்கையாகவே ஆசிக்கின்ருன்.

(ஆ) பாவம்செய்பவர்கள் இவ்வுலகில் பல தடவைகளில் தண்டிக்கப்படாது போகின்றனர். ஆகையால், மறு உலகில் இப் பாவங்களுக்குப் பரிகாரம் இருக்க வேண்டுமென்பது நியாயமே.

(இ) பிற சமயத்தவர்களும் ஆன்மாவின் அழியாத் தன்மையைப்பற்றி நம்புகிருர்கள்.

## பொது வினுக்கள்

**1. இச் சுவிசேஷத்தில் அடங்கியுள்ள கீதங்கள் எவை? இவை யாரால், எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டன?**

(அ) மங்கள வார்த்தை 'Ave maria' (1:28-33) [illegible] யேல் தூதவனல் மரியாளை நோக்கிப் பாடப்பட்டது. [illegible] தேவதாய் ஆகப்போகும் அற்புதத்தை அவளுக்கு அறிவிக்கையில் பாடப்பட்டது.

(ஆ) Magnificat 'மஞ்ஞிபிக்காத்' என் ஆத்துமம் ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது (1:46-55). கன்னிமரியம்மாளால் பாடப்பட்டது, தமது பந்துவாகிய எலிசபேத்தம்மாளைச் சந்தித்தபொழுது.

(இ) Benedictus (1 : 68-70) "இஸ்ராயேலின் கர்த்தர் தோத்திரிக்கப்படுவாராக". ஸ்நாபகரின் தந்தை சக்கரியாஸ் பாடியது. ஸ்நாபகருக்கு நாமம் சூட்டியபொழுது.

(ஈ) Gloria "உன்னதங்களிலே..." (2 : 14). தேவதூதனுல் இரட்சகரின் பிறப்பை இடையருக்கு அறிவிக்கும் பொழுது பாடப்பட்டது.

(உ) Nunc Dimittis "உம்முடைய தாசனைச் சமாதானத்தோடு போகவிடும்" (2 : 29-32). சிமியோனுல் பாடப்பட்டது. காணிக்கையாய் ஒப்புக்கொடுக்கும்படி தேவாலயத்துக்கு [illegible] மரியாளும் கொண்டு சென்ற பொழுது.

---

## குருமடத்தில் பெற்ருேர் தின விழா

சென்றவாரம் 25-10-69 சனிக்கிழமையன்று நகேகொட புனித சூசையப்பர் கல்லூரியில் வருடாந்தப் பெற்ருேர் தினவிழா மிகவும் சிறப்பானவகையில நடைபெற்றது. இவ்விழாவின் முக்கிய அம்சமாக "பெற்ருர் கல்லூரி நிர்வாகிகள்" கூட்டம் நடைபெற்றது. அப்போது கடந்த ஒரு வருடம் கல்லூரியில் நடைபெற்ற விசேட நிகழ்ச்சிகள் கூறப்பட்டன. அதேதருணம் ஒரு மாணவனின் குருவாகப் போகும் அழைத்தலையும், அதற்குக் கிறிஸ்தவ குடும்பம் எங்ஙனம் உதவிபுரியவேண்டும் என்பதையும்பற்றி தக்க ஆதாரத்தின்கீழ் நீண்டநேர விளக்கம் கொடுக்கப்பட்டது. இக் கூட்டத்திற்கு வண. குரவர் அன்ட்று பீற்றர் பர்ஞந்து (குருமட அதிபர்) தலைமை தாங்கினர். கூட்டம் முடிந்தபின் பெற்ருேர்கட்கும் ஏனைய நண்பர்கட்கும்மதிய போசனம் பரிமாறப்பட்டது. பின்பு கல்லூரி மாணவர்கள் தலைமையில் நாடகங்களும், நாட்டியக் கச்சேரிகளும் நடைபெற்று விழா இனிதே முடிவுற்றது.

— குருமட நிருபர்,

---

✠

**திரு. வஸ்தியாம்பிள்ளை முத்துத்தம்பி**

இறைவனடி சேர்ந்த

**31-ம் நாள் நினைவு தினம்**

**மறைவு தினம் 11-10-69.**

கரம்பொன் கிழக்கைச்சேர்ந்தவரும், கஹாவத்தை, கினிகொச்சி பிரபல ஜவுளிவர்த்தகருமாகிய திரு. வஸ்தியாம்பிள்ளை முத்துத்தம்பி கடந்த 11-10-69 அன்று மரணத்திரையினுள் மறையலானுர். அன்னுரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கார்த்திகைத் திங்கள் 10-ம்நாள் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதனைக்கண்ணுறும் குருமார், சந்நியாசர், கன்னியர், அன்பர்கள் அனைவரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிருேம்.

இரக்கமுள்ள யேசுவே இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும். முடிவில்லாதஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவது.

இவரின் பிரிவால் துயருறும் : அருமை மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரம்பொன்,
ஊர்காவற்றுறை

136/69.

---

✠

**திரு. எஸ். யோசெவ் இராசதுரை**

(பெரியவிளான் முன்னுள் தலைமைக்காரர்)

அவர்களின்

**5-ம் வருட மரண ஞாபகம்**

பிறப்பு : 1-2-1915. இறப்பு : 9-11-64.

மக்கள் புலம்பல்

தீராத கவலையினுல்
நொந்தோம் ஐயா
செந்தீயின் புழுப்போலத்
துடித்தோம் ஐயா
ஆராத அன்புடைய
முகத்தை எண்ணி
ஆருக நீர் சொரிந்தோம்
துணையை நீத்தோம்
ஐந்தாண்டு சக்கரமாய்
பறந்த போதும்
இதயத்தில் ஒருகணமும்
மறந்தோம் அல்லோம்
பேராளன் நல்லிறைவன்
துணையால் அந்த
பேருலகில் நீரினிது
வாழுவீரே.

நித்திய இளைப்பாற்றியை இறைவன் இவருக்கு அளிப்பாராக. சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவரின் மறைவுக்காக 10-11-69 திங்கட்கிழமை காலை இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் துக்கப்பாடற்பூசை ஒப்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறுவோர் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடும்படி தயவாக வேண்டுகிருேம்.

மனைவி: செசிலியா மனேன்மணி. மக்கள் : ஜெயருணி, மல்லிகாருணி, மன்மதன், மனேகரன், இன்பம்.

தாயார் : சு. எலிசபேத்.

சிறியதந்தை : அ. செபஸ்ரியாம்பிள்ளை. சகோதரர் : சிசில் வில்லவராயன் மருமக்கள் : வஸ்தியாம்பிள்ளை சேவியர், பிறின்சிலி மனுவேற்பிள்ளை.

பேரப்பிள்ளைகள் : மங்களா, பிறேமளா, பூமளா, செல்வமகன், தர்ஷினி.

---

### நன்றியறிந்த தோத்திரம்

தேவ அன்னை மூலமாகவும், 23-ம் அருளப்ப பாப்பரசர் — பியோசுவாமிகள் மூலமாகவும் பிறேக்நகரப் பாலனிடம்கேட்ட மன்ருட்டுக் கிடைத்தது. நேர்த்தியின்படி பிரசுரம் பண்ணுகிறேன். காலதாமதம் செய்தமைக்காய் யேசுபாலனிடம் மன்னிப்புக் கோருகின்றேன்,

பாலனின் பக்தன்,
கடற்கரைத் தெரு,
நீர்கொழும்பு.

137-69.

---

## வண. சாள்ஸ்.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புனித ஹென்றிக்கப்பர் கலாசாலையினதும்திரும்பவும் மன்னுரிலும் அதிபராகக் கடமையாற்றினுர். 1948-ம் ஆண்டில் சம்பத்திரிசியார் கல்லூரியின் நடுவகுப்புகளின் அதிபராக நியமிக்கப்பட்டார். 1950இல் ஒற்றுவா சர்வகலாசாலை சட்டகலாநிதிப் பட்டத்தைச் சுவாமியாருக்கு வழங்கியது. 1952-ம் ஆண்டில் தமது குருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடும பாக்கியம் பெற்ருர்.

அதன்பின் சில வருடங்களாக கண்டி தேசிய குருமடத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தபின், விருத்தாப்பியத்தினுல் தேகபலனும் ஞாபகசக்தியும் குன்றிப்போனதால், பூரண ஓய்வு எடுத்துக்கொண்டு, யாழ்ப்பாணம் திரும்பி 5 வருடங்களாக கொழும்புத்துறையிலுள்ள "அமலோற்பவம்" எனும் ஸ்தாபனத்தில் தங்கியிருந்தார். அங்குள்ள அமலோற்பவ அன்னையின் தியாகிகள் சுவாமியாரைப் பிள்ளைகளுக்குரிய அன்புடன் நேசித்து அவருடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பெருமிதமடைந்தனர்.

3-ம்தேதி திங்கட்கிழமை காலை சுவாமியாரின் பூதவுடல் கொழும்புத்துறையிலிருந்து சம்பத்திரிசியார் கல்லூரிமாணவரால் கொண்டுவரப்பட்டு, கல்லூரிச் சிற்றுலயத்தில் பொதுசனங்களின் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டது. எண்ணுக்கடங்காத மக்கள் அவரை நாள்முழுவதும் தரிசித்தார்கள். மாலை 4மணிக்கு மரித்தோரின் செபங்களின்பின் நம்மேற்றிராணியாரால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து வண. ஜீ. ரீ. பாலசுந்தரம் சுவாமியார் இறந்தகுரவரின் குணுதிசயங்களையிட்டு உருக்கமான தோர் சொற்பொழிவு நிகழ்த்தினுர். மேடை ஆசீர்வதிப்பின்பின் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும், குருக்கள், கன்னியர் மாணவரும் குரவரின் திருமேனியை ஊர்வலமாக அன்னை மரியின் சேமக்காலைக்கு எடுத்துச் சென்றனர். புனிதவுடல் சேமக்காலையில் அமைந்திருந்தநவமானகல்லறையை அடைந்ததும் இலங்கை அமலோற்பவமரியநாயகி சபைக்குருமாரின் உபசிரேஷ்டரான அதிவண, Z. N. குருஸ் சுவாமியார் அவர்கள் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்க துயரபிரலாப மத்தியில் அடக்கத்திருச்சடங்கு நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமுறைப் பூசைப்பலி

இ. மரியவளன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

## II
## வார்த்தையின் வழிபாடு

இப்பகுதியில் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வாசகங்களும், குருவின் விளக்கவுரையும் முக்கியஇடம் வகிக்கின்றன. தேசிய ஆயர்சபை அதுவசதிப்படாது எனத் தீர்மானிக்காவிடில், இனிமேல் ஞாயிறு கடன் திருநாட்களில் மூன்று வாசகங்கள் வாசிக்கப்படும். இவற்றில் முதலாவது பழைய உடன்படிக்கையிலிருந்தும், இரண்டாவது புதிய உடன்படிக்கையிலிருந்தும், அதாவது, அப்போஸ்தலர்களின் நிருபங்களிலிருந்தும், மூன்றுவது சுவிசேஷத்திலிருந்தும் எடுக்கப்படும். இதுஒரு புதிய புரட்சியல்ல; ஆனல் பண்டைய மரபின் மறுமலர்ச்சியேயாகும்,ஏனெனில், பண்டைக்காலப் பூசையிலும் மூன்று வாசகங்கள் இடம்பெற்றன என்று வரலாற்றின் வழியாக அறிகின்ரேம். மூன்று வாசகங்கள் இரு உடன்படிக்கைகளின் ஒருமைப்பாட்டையும் ஈடேற்ற அலுவலின் தொடர்பையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

**1. முதல் வாசகம்:** குரு அல்லது ஒரு வாசகர் வாசக மேடையில் நின்று அன்றைய பூசைக்குரிய பகுதியைப் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வாசிப்பார். இவ்வேளை மக்கள் அமைதியாக உட்கார்ந்து அதைக் கேட்பர். வாசகமுடிவில் சிறிதுநேர மௌனம் இடம்பெறும். இந்த மௌனம் மக்கள் வாசகத்திலே கேட்டவற்றை மனதிலே பதித்துச் சிந்திப்பதற்கு உதவியாக இருக்கும். அதன்பின் குரு "இது ஆண்டவரின் அருள்வாக்கு" என்றுகூற, மக்கள் "இறைவனுக்கு நன்றி" எனப் பதில்கூறுவர்.

**2, தியானப் பாடல்:** அன்றைய வாசகத்தோடு தொடர்புள்ள ஒரு சங்கீதம் பாடப்படும்.

**3. இரண்டாவது வாசகம்:** இவ்வாசகமும் முதல் வாசகத்தைப் போலவே வாசிக்கப்படும்.

**4. அல்லேலூயா:** இரண்டாவது வாசகத்தின்பின் அல்லேலூயாப் பாடல் அல்லது வேறொரு சங்கீதம் பாடப்படும்.

**5. சுவிசேஷம்:** குரு பீடத்தின்முன் தலைகுனிந்து மௌனமாகச் செபிப்பார். பின் வழமைபோல் சுவிசேஷத்தை வாசிக்கத் தொடங்குவார். மக்கள் எழுந்துநின்று கேட்பர். அதன்முடிவில் குரு, "இது ஆண்டவரின் அருள் வாக்கு" என்றுகூற, மக்கள் "கிறீஸ்துவே, உமக்குப் புகழ்" என்று பதில்கூறுவர்.

**6. திருவுரை:** ஞாயிறு கடன்திருநாட்களில் குரு அன்றைய வாசகங்களை விளக்கி உரைநிகழ்த்துவார். ஏனைய நாட்களிலும் வசதியிருப்பின் ஒருசிறு விளக்கவுரை கொடுத்தல் விரும்பத்தக்கது.

**7. விசுவாசப் பிரமாணம்:** இது ஞாயிறு கடன் திருநாட்களில் சொல்லப்படும். ஏனைய பெருவிழாக்களிலும் சொல்லப்படலாம். இவ்வாறு மக்கள் தாம் வாசகங்களிலும் திருவுரையிலும் கேட்ட இறைவாக்கை ஏற்றுக் கொள்வதாக எடுத்துக் காட்டுகின்றனர். ஏனெனில், திருவுரையால் விளக்கப்படும் வாசகங்களில் இறைவன் தம் மக்களோடு பேசுகிருர்; அவர்களுக்கு மீட்பின் மறை உண்மைகளை வெளிப்படுத்துகிருர்; அவர்களுக்கு ஆன்மீக ஊட்டமளிக்கின்ருர்.

**8, விசுவாசிகளின் மன்ருட்டு:** இதன் வழியாக முழுத்திருச்சபையின்தேவைகளுக்காகவும் அனைத்துலகின் ஈடேற்றத்திற்காகவும் வேண்டுதல் செய்யப்படுகிறது. இத்துடன் வார்த்தையின் வழிபாடு முடிவுபெறும்.

## III
## நற்கருணை வழிபாடு

இதுவே பூசைப்பலியின் முக்கிய பாகமாகும். இதற்கு முந்தியபாகம் இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பாகத்திலேதான் சிலுவைப்பலி புதுப்பிக்கப்படுகிறது. பலிவிருந்தில் நாம பங்குபெறுகிருேம். இப்பாகம் பலிப்பொருட்களின் தயாரிப்பு, நற்கருணை வேண்டுதல், திருவிருந்துச் சடங்குகள்என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

### I. பலிப்பொருட்களின் தயாரிப்பு:

முன்பு காணிக்கைப்பகுதி என அழைக்கப்பட்ட இப்பாகம் அதன் உண்மைக்கருத்துக்குப்பொருத்தமானமுறையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் உண்மையானபலிநற்கருணைவேண்டுதலின்போது ஒப்புக்கொடுக்கப்படும். அப்ப இரசக்காணிக்கை அதன் நிழலாகவும் முன்சுவையாகவும் மட்டுமே அமைந்துள்ளது. நாம் எமது சொந்தப் பொருட்களைக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பதன்மூலம் எம்மையே இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கிருேம். நற்கருணை வேண்டுதலின்போது ஒப்புக்கொடுக்கப்படும் கிறிஸ்துவின் பலியோடு இணைத்து எம்மையே கடவுளுக்குப் பகிரங்கமாக அர்ப்பணம் செய்கின்ருேம். இந்த அர்ப்பணத்தின் அடையாளமாக மட்டுமே அப்ப இரசக் காணிக்கை விளங்குகின்றது. எனவே, நற்கருணை வேண்டுதலில் ஒப்புக்கொடுக்கப்படும் உண்மையான பலியை முன்கூட்டியே ஒப்புக்கொடாதபடி, அப்ப இரசக் காணிக்கை [illegible] சொல்லப்படும் [illegible] மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. ஆசீர் அளிப்பதற்குப் பரம்பரையாகப் பயன்படுத்தப்பட்ட வேதாகம வாக்கியங்கள் இங்கும் கையாளப்பட்டுள்ளன அவை இறைவனின் சிருட்டிப்புச் செயலையும், பலிக்குவேண்டிய பொருட்களை ஒப்புக்கொடுப்பதில் மனிதனுக்குரிய பங்கையும் எடுத்துக் காட்டுகின்றன.

**1 காணிக்கைப்பாடல்:** காணிக்கைக்கு வேண்டிய பொருட்களைப் பணியாளர் பலிபீடத்துக்குக் கொண்டு வரும்போது இது பாடப்படும்.

**2. அப்பத்தின் காணிக்கை:** குரு அப்பத்துடன் திருத்தட்டை உயர்த்தியவண்ணம் பின்வருமாறு செபிப்பார்: "ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, உம்மைப் போற்றுகிருேம். ஏனெனில், உமது அருட்பெருக்கிலிருந்து நாங்கள் இந்த அப்பத்தைப் பெற்றுக்கொண்டோம்.நிலத்தின் விளைவும், மனித உழைப்பின் பயனுமான இந்த அப்பத்தை உமக்கு ஒப்புக் கொடுக்கிருேம். இது எங்களுக்கு வாழ்வளிக்கும் அப்பமாக மாறும்."

காணிக்கைப்பாடல் முடிவுற்ருல் குரு இச்செபத்தைத் தெளிவான குரலில் சொல்லுவார். மக்கள், "இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக" எனப் பதிலளிப்பர். அல்லாவிடில் குரு தனியே அமைதியாக இச்செபத்தைச் சொல்லுவார்.

**3. இரசத்துடன் தண்ணீர் கலத்தல்:** குரு திருக்

(தொடர்ச்சி மறுபக்கம்)

# நாளை..

"அம்மா போயிற்று வாறேன்." வழமைபோல் ஒரு சத்தத்தைப் போட்டுக்கொண்டே வெளிக் கதவைப் பூட்டிவிட்டு வாசற்படியைத் தாண்டி வீதிக்கு வந்துகொண்டிருந்தேன். "டேய் அருள்!" ஆச்சரியத்துடனும் ஆவலுடனும் எழுந்த குரல் ஒன்று என்னைத் தடுத்து நிறுத்தியது. திரும்பிப் பார்த்தேன், என் கண்களை என்னுலேயே நம்ப முடியவில்லை.

"அருள் என்னடா மலைச்சுப்போயிற்ருய்? என்னைத் தெரியேல்லையா உனக்கு?"

"குணம்! எத்தனை வருடமடா உன்னைப் பார்த்து. எண்டாலும் மறக்க முடியுமாடா?"

"அதுசரி. கடிதம் போட்டாலும் பதில் போடமாட்டாய். நீ, பெரிய பிசிமான். என்னடா இப்படி ஊதிப் போய் இருக்கிருய்?"

"சும்மா இரடா, உன் கண் பட்டாலே மெலிஞ்சுபோயிடுவேன். சுருக்கமாகச் சொன்னு, குணம் நான் கவலைப்படுகிறதேயில்லையடா. கவலை வரும்போது சிரிப்பேன். ஆண்டவனையும் நினைப்பேன் அவ்வளவுதான்."

"டேய்! அருள் உனக்கு விசயம் தெரியுமாடா, ராஜனும் மரி பண்ணிற்ருன்ரு."

"என்னடா ராஜனும்...... அப்படியெண்டால் நீ......"

"ஓ.. யெஸ் நாளையோட ஒரு வருசமாகுது. கோபிக்காத மச்சான் காதோட காதா சட்டுபுட்டு எண்டு முடிஞ்சுது. அதனுல்தான் உனக்கும் அறிவிக்க நான் முயற்சிக்கவேயில்லை."

"யூ ஆர் ரைட். இப்ப கலியாணம் எல்லாம் காதோடு காதாய் காதலர்களுக்கிடையே நடந்து முடியுது. தாங்கள் இப்ப எங்க பயணம்?"

"அது பெரிய கவலையான விசயம் மச்சான்."

"என்னடா பெரிய கவலையான விசயம்."

"எனக்குக் கலியாணம் முடிஞ்சு ஆரும் மாசம் என்னுடைய மாமனர் பாரத்தை என்மேலேயே சுமத்தியிற்று அவர்பாட்டுக்குப்போயிற்ருர்."

"அவர் புண்ணியம் செய்தவர், பொருமையும் வஞ்சகமும் பெருக்கெடுக்கிற இந்த உலகத்தைவிட்டு நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்திட்டார்."

"உனக் கெதுக்கெடுத்தா [illegible] நாளைக்கு [illegible] தாண்டா போறன்."

"ஏண்டா இந்த இளம் வயதில சவக்காலைக்குப்போருய்?"

"முட்டாள், கார்த்திகை மாதம் இரண்டாம் திகதி உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாளல்லவா? சவக்காலைக்கு நிறையப்பேர் வருவாங்க, தெரியாத மாமனு நடைய கல்லறையையும் ஒரு மதிப்பாய் வைச்சிருக்கவேண்டாமா...."

"ம்... புரியிது நிறுத்து. அவர் எப்படி வாழ்ந்தாரோ? அவருக்காக, உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காக மன்ருடவேணுமே, ஒரு பூசையை ஒப்புக்கொடுக்க வேணுமே அதெல்லாம் பிரச்னையில்லை. ஆனல் வெளிமதிப்புக்காகப் பளிங்குக் கல்லறை கட்டி, சிலுவை நாட்டி அழகுபடுத்தினுல் போதும். பச்சோந்தி உலகமடா இது."

"அருள் உன்னேடு பேசி ஜெயிக்கமுடியாது, என்னை விடு."

"அதுதான் முடியாது. நாளை நீங்க கலியாணம் செய்து ஒரு வருடம் ஆனபடியால் நாளைக்கு என்னுடைய வீட்டில் திருவாளர் குணம்

ம. அல்போன்ஸ் அரியநாயகம்

தம்பதிகளுக்கு மதியவிருந்து. நானே நேரில் வந்து தங்களை அழைத்துக்கொண்டு வருவேண போதுமா?"

"நான் மறுத்தா நீவிடப்போற ஆளிலை. சரி, உன் விருப்டப்படியே ஆகட்டும். இப்ப ஆளை விட்டால் போதும்."

அன்புடன் என் கரங்களைக் குலுக்கிவிட்டுச் சவக்காலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான் என் நண்பன். பாடசாலை நாட்களில் இருந்த அதே குறும்புத்தனம் இன்னும் அவன் பேச்சிலும் முகத்திலும் பிரதிபலிக்கத்தான் செய்கிறது. அவனுக்கு வாய்த்த மனைவி எப்படியோ. நாளை பார்த்துவிட்டால் போகிறது.

* * *

"என்ன உலகமடா இது. வெளிவாசலில் வைச்சுத்தான் பிச்சைக்காரனுக்குச் சாப்பாடு போடவேணும். ஏதோ தாங்கள் சாப்பாடு போடுறதை நாலுபேர் பார்க்கவேணுமாம். அவனும் மனிதன்தானே, உள்ளே கூட்டிக்கொண்டு போய் அமைதியாக ஒரு பக்கத்தில் இருத்திச் சாப்பாடு போட்டாலென்ன?"

"என்னண்ணே புலம்புறீங்க?"

"ஒன்றுமில்லைத் தங்கச்சி, நான் வரேக்க ஒரு காட்சியைக் கண்டன், அதுதான் புலப்புகிறன். அது கிடக்கட்டும் விருந்துச் சாப்பாடு ரெடியா?"

"எல்லாம் ரெடி. நீங்க சொன்னமாதிரியே உங்கசினேகிதனுக்குப் போட்டிருக்கிற நெய் சாதத்தில் ஒரே உப்பு."

"அவன் மனைவி?"

அதில உப்பில்ல. அவர் உப்பென்று கத்துவார். அவ உப்பில்லை என்பா. ஒரே சிரிப்புத்தான்."

"சரி, நான் போய் அவர்களை அழைச்சிட்டு வாறன்."

"அண்ணே!"

"என்ன தங்கச்சி?"

"நாளைக்கு நீயும் ஒரு கலியாணத்தைப் பண்ணிக்கோ, அப்பதான் அவர்களும் விருந்து வைப்பாங்க."

என் தங்கையின் குறும்புப் பேச்சைக்கேட்டு சிரிப்போடு ஒரு சிந்தனைக் கருத்தும் என் உள்ளத்தே பிறந்தது.

"நாளை என்றொருநாள் உன்வாழ்வில் என்றும் வரும் என எண்ணி ஏமாந்துவிடாதே" என்பதுதான் அது. சிந்தித்தவண்ணமே வெளிக்கதவைப் பூட்டிக்கொண்டு வாசலில் இறங்கினேன், நான் இறங்கவும், என்னை மூட்டி வீழ்த்துமாப்போல் என் அருகே ஒரு டாக்சி வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

"அண்ணே நீங்கதானே அருள்?" டாக்சிக்குள் இருந்த இளம் வாலிபனின் குரல் பரிதாபமாக வினவியது.

"ஆமாம்நீங்க யார் தம்பி?"

"உங்கவீட்டுக்கு வரத்தான் அக்காவும் அத்தானும் புறப்பட்டு நின்ருங்க; திடீரென அத்தான் மயக்கம்போட்டு விழுந்திட்டாரு. உடனேயே அவரை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டிட்டோம்."

அவன் சொல்லிமுடிப்பதற்குள்ளேயே நான் டாக்சிக்குள் ஏறிக்கொண்டேன். டாக்சி விரைந்துபோய் நின்றது.

என் நண்பனிடம் ஓடிச் சென்றேன். நாளை விருந்திற்குக் கட்டாயம் வருவேன் என்று கூறிச்சென்ற என் நண்பனின் உயிரற்ற வெறும் சடலத்தைத்தான் என்னல் அங்கு காணமுடிந்தது!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாசகன்போல் நடித்த லட்சாதிபன்

போர்த்துக்கால் நாட்டில் போட்லைவனுக்குப் பெயர் பெற்றது ஒபோட்டோநகர். அழகும், செல்வவளமும் பெற்ற ஒருசிறந்த நகர். செல்வந்தர்கள் பலரும் அரசமாளிகைபோலும் பெருமனைகளில் கோலாகலமாக வாழ்ந்துவந்த அந்நகரில் தொன் ஜுவான் எனும் போர்த்துக்கேய இளைஞன் ஒருவனும் வசித்திருந்தான். உயர்கலை பயின்று, தொழில்துறையில் ஈடுபட்டிருந்த அவன் மிகுந்த செல்வமீட்டித் தானும் ஒரு செல்வந்தனாக வேண்டுமெனப் பேராவல் கொண்டவனாய் அல்லும் பகலும் அயராதுழைத்தான். செல்வத்தைத் தேடிப் படாதபாடு பதினெட்டும்பட்டு அவன் உழைத்தபோதிலும் செல்வமோ அவனைத்தேடி வரவில்லை. அதனால் ஏமாற்றமடைந்த ஜுவானின் மனம் களைத்தது. ஓயாத உழைப்பால் அவன் உடலும் சளைத்தது.

அங்ஙனமாக, அந்நாளில் போர்த்துக்கேயர் பலரும் பிறநாடுசென்று அதிகம்பொருளீட்டிப் பெருஞ்செல்வந்தராய்த் திரும்புவதை அறிந்திருந்த அவன் உள்ளத்தில் ஒருபுதிய உணர்ச்சி பிறந்தது. அதாவது அவர்களைப்போல ஏன்நானும் பிறநாடுசென்று பணமீட்டிவரப்படாது என்பதே. ஈற்றில் ஒருமுடிவுக்கு வந்தான். தனது சுயநாடு துறந்து பிறநாடு செல்லத் துணிந்தான். ஆனால், எந்தநாடு செல்வதென்ற ஒருபிரச்சினை எழுந்தது. அந்நாளிலே இந்தியாவிலும், போர்த்துக்கேயரின் செல்வாக்கு அதிகமாயிருந்தது. அதனால் அங்குசெல்வதென்றே முடிவு செய்தான்.

சகல ஆயத்தமும் செய்துகொண்டு ஒருநாள் அங்கிருந்து இந்தியா செல்லவிருந்த போர்த்துக்கேய கப்பலொன்றில் தனது உற்றாருறவினர் பலரும் வழியனுப்பிவைக்கப் பயணமானான். நீண்டநாள் பிரயாணத்தின்பின் கப்பலும் சேமமாக இந்தியகரையைச் சேர்ந்து கரைதுறைப்பட்டணம் ஒன்றில் நங்கூரமிட்டுத் தங்கியது. ஜுவான் அதிலிருந்து கரையிறங்கினான். சிலதினங்களாகப் பிழைப்புத் தேடிவந்து கடைசியாகப் போர்த்துக்கேயரது செல்வாக்கிலுள்ள வர்த்தகநிறுவனம் ஒன்றில் பதவியேற்றான். அதிலே சிலவருடகாலம் தான்பெற்ற அனுபவத்தைக் கொண்டு தன்பெயரில் புதிய வர்த்தகஸ்தாபனம் ஒன்றை நிறுவினான். தன்சொந்தநாட்டில் கைகொடுத்தும் வாராத அதிர்ஷ்டதேவதை இந்தியநாட்டில் அவனைக் கைகொடுத்து வரவேற்றது. சிலவருடகாலத்தில் தொன்ஜுவான் வர்த்தக ஸ்தாபனத்தின்பெயர் எங்கும் கொடிகட்டிப்பறந்து பிரஸ்தாபம்பெற்றது. அவனுக்கும் செல்வத்தின்மேல் செல்வம் வந்துகுவிந்தது. இப்பொழுது ஜுவான் ஒருலட்சாதிபன். ஆம், பலலட்சத்துக்கு இலக்காகிவிட்டான். அவனுக்கும் இனிமேல்போதுமென்றாகிவிட்டது.

அதனால் தன்சுயநாடு திரும்பித் தான்பெற்ற செல்வத்தைத் தனது உள்ளூர்உறவினருடன் ஆண்டனுபவிக்க வேண்டுமென ஆவல்கொண்டான். தன்னுடைய வர்த்தக ஸ்தாபனத்தை விற்றுவந்த பணமுழுவதையும் திரட்டிக்கொண்டு தனது சுயநாடு திரும்பக் கப்பலேறினான். கப்பலும் கடல்கள்பல கடந்து நெடுநாள் பிரயாணத்தின்பின் அவன் சுயநாடுபோய்ச் சேர்ந்தது. அவனும் தன்சொந்த நகரை அடைந்தான். அங்கு சிலகாலம் ஒருநாடோடி போன்று நடமாடித்திரிந்தான். அதன்மேல் தன்பாரிய செல்வத்தைத் தனது சுற்றத்தவர்களுக்குப் பகிர்ந்தளித்து எல்லோருடனும் இன்பமாக வாழ்க்கை நடத்துமுன் ஒரு பரிசோதனையில் இறங்கினான். அதாவது அவர்களிலே எவர் தன்னில் உள்ளன்புகொண்டுள்ளவர்கள் என்பதைக் கண்டுகொள்வான் ஒருபரீட்சை நடத்தினான்.

அவன் ஒருநாள் யாசகன் ஒருவனைப்போல் வேஷம்பூண்டான். ஒருசோடி பழஞ்சப்பாத்துகளை எடுத்துமாட்டினான் காலில். பழைய கந்தை உடைஒன்றைத் தூக்கிப்போட்டான் மேலில். பிட்சாபாத்திரம் ஒருகையில். ஊன்றுகோல் மறுகையில். பலநாள் சவரஞ்செய்யாத முகத்துடனும், கூன்விழுந்த முகத்துடனும் அவர்களின் இல்லங்கள்தோறும் யாசகஞ்செய்ய வெளிகொண்டான். ஆனால், இந்தஎளிமையான கோலத்தில் அவர்களில் எவருமே அவனை இன்னாரெனக் கண்டுகொள்ளவுமில்லை. அனுதாபம் காட்டவுமில்லை. சிலர் அவன் முகத்தில் அறைந்தாற்போலக் கதவை அடித்துச் சாத்தினர். சிலர் நாயைக் கட்டவிழ்த்துவிடப் பார்த்தனர். சிலர் கண்டும் காணாதவர்போல் அவனைக் கடத்தினர். சிலர் ஆளைப்பார், அவருடைய உயரம், பருமனைப்பார் உழைத்துத்தின்ன மாட்டாமல் ஊரிலே பிச்சையெடுத்துத் திரிகிறானென்று வசைபாடி வழியனுப்பினர். சிலர் பாவம், ஏதோ ஏலாத்தன்மையினால்தானே இரந்துபிழைக்க வேண்டிவந்ததென்று மனமிரங்கினராயினும் அன்னாரின் கரமிரங்கவில்லை. சிலர் அவனுடன் மரியாதையாகப் புழங்கினாராயினும் அன்னதானமோ, வேறென்னதானமோ வழங்க அவர்களுக்குக் கைவரவில்லை. இவ்வாறு அவர்களெல்லாம் தனது யாசககோலங்கண்டு ஏமாறியதுகண்டு அவன்மனம் வருந்தியது.

கடைசியாக அவன் களைப்பும், மனக்கசப்புங் கொண்டவனாய்த் தனது இளையசகோதரி வசித்திருந்த சிறியகுடிசைக்குச்சென்று கதவில் தட்டினான். அவள் உடனேவந்து கதவைத்திறந்தாள். கந்தை உடையில் காட்சியளித்தபோதிலும் தூலக்கொண்டு ஆளை இன்னாரென அறிந்துகொண்டாள். பலவருடங்களின்பின் தனது அருமைச்சகோதரனைக் கண்டதில் ஆனந்தமும், மனஆறுதலும் அடை[illegible]

அண்ணா வாருங்களென்று அன்புக்கரம்நீட்டி அவனை உள்ளே அழைத்துச்சென்றாள். தொட்டியில் நீர்இறைத்து அவனை நீராடச்செய்தாள். அவன் அணிந்திருந்த கந்தை உடையைக் களையும்படி செய்து தன்னிடமிருந்த ஒரு நல்லஉடையை அவன் உடுக்கச்செய்தாள். பின்னர் அவன் பசியாற அன்னம்படைத்தாள். தாகந்தீரத் திராட்சைப் பானம் கொடுத்தாள். எஞ்சியுள்ள காலமுழுவதும் தன்னோடுவசிக்கும்படியாய் அவனை வருந்திக் கேட்டாள். அதன்மேல் அவன் வந்தகளைதீரப் படுத்துறங்க வைத்தாள்.

பிந்த இருவருக்குமிடையே நிகழ்ந்த சம்பாஷணையின்போது, தான் இந்தியாசென்றதும், அங்கு பெரும்பொருள் தேடி ஒரு குபேரனாகவந்ததும், தன்உறவினருக்குத் தனதுசெல்வத்தைப் பகிர்ந்தளித்து அவர்களுடன் கம்பீரமாக வாழவிரும்பியதும், அவர்களைச் சோதிக்குமுகமாக ஒருயாசகன்போல் நடித்து அவர்களின் வீடுகள்தோறும்சென்று யாசகஞ்செய்து வந்ததும், அவர்கள் தன்னை ஓர் அந்நியன்போல் நடத்தியதும், அவள் ஒருத்தியே தனதுமாறுவேடத்தில் மதிமயங்காது தன்னை அன்புடன்வரவேற்று உபசரித்துமாகிய சம்பவமுழுவதையும் தன்சகோதரிக்குச் சவிஸ்தாரமாக அவன் எடுத்துக்கூறினான்.

பின்னர் நகரின்சுற்றுடலிலே தான் நவமாகவாங்கிய அலங்காரமனைக்கு அவளை அழைத்துச்சென்றான். அதன் விசாலமான கட்டிடத்தையும், அதிலிருந்த விலைபெற்ற தளபாடங்களையும் அவளுக்குக் காண்பித்தான். தனது திரண்டசொத்து முழுவதுக்கும் அவளையே உரிமைக்காரி ஆக்கினான். இதுசெய்தி காட்டுத்தீபோன்று அவன் சுற்றத்தவர்களிடையே பரந்தது. அதைக்கேட்டதும் அவர்கள் தங்கள் மதியீனத்தை நினைந்து கவலையடைந்தார்கள். ஐயோ, ஆளை இன்னாரென அறிந்தோமில்லையே, அறிந்தால் நாங்களும் அதிர்ஷ்டசாலிகளாய் இருப்போமே, ஆயினும் இனிமேல் இதைப்பற்றிச் சிந்தித்து ஆவதொன்றில்லை, காலம் பிந்திவிட்டது என்றார்கள்.

நிற்க, கிறிஸ்துநாதரும் யாசகர்கோலமாய் நமதுஇல்லங்களுக்கு எந்நாளும் வந்துகொண்டிருக்கிறார். தருமங்கேட்டு எமதுகதவுகளில் தட்டுகின்றார். ஒருவேளை கூன்விழுந்து, கண் குழிவிழுந்து, ஊன்றுகோலும் கையுமாக ஒருமுதிய கிழவனைப்போல் வந்து நம்மிடம் தருமம்கேட்கின்றார். மற்றொருவேளை கந்தையுடை அணிந்து, உடல் நலிந்து, தரித்திரகோலமாய் வந்து உண்ணஉணவோ அன்றேல் உடுக்க ஒருமுழத்துணியோ தரும்படி இரந்துகேட்கின்றார். இன்னொருவேளை இருக்க இல்லிடமின்றித் தவிக்கும் ஓர் அநாதைபோல் வந்து தமக்கு ஓர்உறைவிடம் [illegible]

பாரியகுடும்பத்தைக் கொண்ட ஓர்ஏழைபோல்வந்து தமக்கு நிவாரணம் அளிக்குமாறு கையெடுக்கின்றார். சிலவேளை கைக்குழந்தை ஒன்றுடன் வறியஒரு தாயைப்போல், ஆதரவற்றுத் தவிக்கும் ஓர் இளம் குமரைப்போல, தாகத்துக்குத் தண்ணீரும், பசிக்குப் பட்சணமும்கேட்கும் ஒரு பரதேசியைப்போல வந்து நிற்கின்றார். இத்தகைய பல்வேறு மாறுவேடங்களிலும் நமதுஆண்டவர் வரும்பொழுது நாமும் ஜுவானின் உறவினரைப்போன்று உதாசீனஞ்செய்து அவரை வெறுக்கின்றோம். அவருக்கு உதவிசெய்து அனுதாபம்காண்பிக்க மறுக்கின்றோம். அவமரியாதைசெய்து அவரை வழியனுப்புகிறோம்.

ஆனால், ஒருநாள்வரும் "ஓர்ஏழையின் கோலமாய் எமது உதவியைத்தேடி எம் இல்லத்தைநாடி வந்தவர் அவர்தானென்று அப்பொழுது நாம் அறிந்தோமில்லை" என மனம்வருந்துவோம். ஆனால், அப்போது மனம் வருந்தி ஆகப்போவதொன்றில்லை. ஏனெனில், அப்போது காலம் பிந்திப்போய்விடும் அன்றோ! 'என்னுடைய மிகவுஞ் சிறிய சகோதரர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே அதைச்செய்தீர்கள்" என்று ஏற்கனவே அவர் தெரிவித்திருக்கும்போது அந்தவேளை நாம் எந்தஒருசாக்குப்போக்கும் சொல்ல இடமிராது. கிறிஸ்துநாதரை அவருடைய ஏழைகளிலே புனிதர்கள்பலரும் கண்டுவேண்டியிருந்தார்களென்ற விசுவாசப்போக்கு நம்மிடம் இருந்தால் நமதுசீவியகாலத்தில் இந்தப் பிழையை ஒருபோதும் செய்யமாட்டோம். சுபம்.

---

# புதுமுறைப் பூசைப்பலி

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிண்ணத்தில் திராட்சை இரசமும் சிறிது தண்ணீரும் ஊற்றுவார். ஊற்றும்போது, "இத் தண்ணீரும் இரசமும் கலக்கும் மறைநிகழ்ச்சி வழியாக எமது மனுஷீகத்தில் பங்குபெறத் திருவுளங்கொண்டவரின் தெய்வீகத்தில் நாம் பங்குபெறச் செய்தருளும்" என்று அமைதியாகச் சொல்லுவார்.

**4. இரசத்தின் காணிக்கை:** குரு திருக்கிண்ணத்தை உயர்த்தியவண்ணம் பின்வருமாறு செபிப்பார்: "ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, உம்மைப் போற்றுகிறோம். ஏனெனில், உமது அருட்பெருக்கிலிருந்து நாங்கள் இந்த இரசத்தைப் பெற்றுக்கொண்டோம். திராட்சைக்கொடியும் மனிதஉழைப்பும் தந்த இந்த இரசத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். இது எங்கள் ஆன்ம பானமாக மாறும்."

மக்கள், "இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக' என்று பதில் கூறுவர். அதன்பின் குரு அமைதியாகப் பீடத்தின்நடுவில் தலைகுனிந்து இத்திருப்பலியை ஒப்புக்கொடுக்கும் குருவாக இப்பீடத்தில் நிற்பதற்குத் தமது தகுதியின்மையை உணர்ந்தவராய், பின்வருமாறு செபிப்பார். "ஆண்டவரே, தாழ்ச்சியும் மனஸ்தாபமும் நிறைந்த உள்ளத்தைக் கொண்டுள்ள எம்மை ஏற்றருளும்" இவ்வாறு இறைவனாகிய ஆண்டவரே, இன்று உம்திருமுன் நாம்செலுத்தும் பலியானது உமக்கு உகப்பானதாய் இருப்பதாக." அதற்குப்பின் சிலசந்தர்ப்பங்களில் குரு பலிப்பொருட்களுக்கும் பீடத்துக்கும் தூபம் காட்டுவார்.

**5. கை கழுவுதல்:** கடவுளுக்குப் பலிசெலுத்துபவரிடம் விளங்கவேண்டிய தூய்மையை எடுத்துக்காட்டும்வண்ணம் குரு தமது கைகளைக் கழுவுகிறார். கழுவும்போது பின்வருமாறு அமைதியாகச் செபிப்பார், "ஆண்டவரே, என் அக்கிரமத்திலிருந்து என்னைக் கழுவியருளும்; என் பாவத்திலிருந்து என்னைத் தூய்மையாக்கியருளும்."

அதன்பின் நாம் ஒப்புக்கொடுக்கப்போகும்பலி இறைவனுக்குஏற்றதாகும்பொருட்டுச் செபிக்கும்படி குரு மக்களைக் கேட்டுக்கொள்வார்.

**6. காணிக்கை மன்றாட்டு:** அன்றைய பூசைக்குரிய மன்றாட்டைக் குரு தெளிவான குரலில் சொல்லுவார். அதன் முடிவில் மக்கள், "ஆமென்" எனப் பதில்கூறுவர். இத்துடன் இப்பகுதி முடிவுறும்.

## II. நற்கருணை வேண்டுதல்:

இப்போது நான்கு வகையான நற்கருணை வேண்டுதல்கள் வழக்கத்தில் இருக்கின்றன. இவை அனைத்திற்கும் பொதுவான சில அம்சங்கள் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக ஈண்டு சிறிது ஆராய்வோம்.

**1. நன்றியுரை:** ஒவ்வொரு நற்கருணை வேண்டுதலும் பொருத்தமான ஒரு நன்றியுரையோடு ஆரம்பமாகும். அதன்வழியாகக் குரு எல்லாமக்களின் பெயராலும் கடவுளுக்கு நன்றி கூறுகிறார். ஈடேற்ற அலுவலுக்காகவும், மேலும் அன்றைய பூசைக்கு ஏற்றதாக வேறு சில குறிப்பிட்ட காரணங்களுக்காகவும் அவர் நன்றித் துதி செலுத்துகிறார்.

**2. ஆர்ப்பரிப்பு:** நன்றியுரையின் முடிவில் மக்கள் எல்லாரும் ஒன்றாக வானுலக சேனையுடன் சேர்ந்து, "பரிசுத்தர், பரிசுத்தர்" என ஆர்ப்பரிப்பர்.

**3. அர்ச்சிப்பு வேண்டுதல்:** மனிதரால் ஒப்புக்கொடுக்கப்பட்ட காணிக்கைப்பொருட்களை இறைவன் திருநிலைப்படுத்தி அர்ச்சித்து,

[மறுபக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமுறைப் பூசைப்பலி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நம் ஆண்டவராகிய யேசுக் கிறிஸ்துவின் திருவுடலும், உதிரமுமாக மாறச்செய்ய வேண்டுமென்று திருச்சபை பிரார்த்திக்கிறது.

**4. நற்கருணை ஏற்படுத்தப்பட்ட வரலாறு:** இறுதி இரவுணவின்போது நம் ஆண்டவர் தேவநற்கருணையை ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்திய சொற்களும், செயல்களும் இதில் எடுத்துக் கூறப்படுகின்றன.

**5. நினைவு கூருதல்:** ஆண்டவருடைய கட்டளைப் படி அவருடைய திருப்பாடுகளும், உயிர்ப்பும், விண்ணேற்றமும் இதிலே நினைவு கூரப்படுகின்றன.

**6. பலி ஒப்புக்கொடுத்தல்:** இதுவே நற்கருணை வேண்டுதலின் முக்கிய அம்சமாகும். திருச்சபை பரிசுத்த ஆவியில் பரமபிதாவுக்கு ஒரு தூய பலியை ஒப்புக்கொடுக்கின்றது. இறைமக்கள் இவ்வாறு இத்தூயபலியுடன் தங்களையும ஒப்புக்கொடுத்து, நாளுக்குநாள் கிறிஸ்து வழியாக இறைவனின் ஐக்கியத்தில் வளர வேண்டுமென்று திருச்சபை ஆசிக்கின்றது.

**7. பரிவுரைகள்:** விண்ணுலகையும் மண்ணுலகையும் சார்ந்த முழுத் திருச்சபையும் ஒன்றாக இந்த நற்கருணை வழிபாட்டில் பங்கு பெறுவதை இவை எடுத்துக் காட்டுகின்றன. வாழ்வோர் இறந்தோர் அனைவருக்காகவும் இப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

**8. புகழ்ப்பாடல்:** நான்கு நற்கருணை வேண்டுதல்களும் ஒரேவகையான புகழ்ப் பாடலுடன் முடிவடைகின்றன. இதன் வழியாகக் கடவுளின் மாட்சி அறிக்கையிடப்படுகிறது. இறுதியில் மக்கள் "ஆமென்" எனப் பதிலளித்து, இதை முடிவுறச்செய்வர்.

## III. திருவிருந்துச் சடங்குகள்:

பொதுவாக எல்லாப் பலிகளிலும் பலிவிருந்து இடம் பெறுகின்றது. இன்னும் சிறப்பாக நற்கருணைப் பலியில் திருவிருந்து முக்கிய இடம் வகிக்கின்றது. ஏனெனில், நற்கருணை வழிபாடு பாஸ்காத் திருவிருந்தாகவும் விளங்குகின்றது. எனவே, ஆண்டவர் கட்டளைப்படி நாம் அவருடைய உடலையும் உதிரத்தையும் எம் ஆன்ம உணவாகப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

**1. ஆண்டவரின் செபம்** திருவிருந்தை அருந்துவதற்கு நாம் அருகதையுடையவராக இருக்கவேண்டுமெனில் அதற்குத் தகுந்த ஆயத்தம் செய்வது அவசியம். எனவே, அதற்கு ஆயத்தமாக ஆண்டவர் கற்பித்த செபத்தைச் சொல்லும்படி குரு மக்களைக் கேட்டுக்கொள்வார். அதன் பின் எல்லாரும் ஒன்றாக அதைச் சொல்லுவர். இச்செபத்தில் எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம். கிறிஸ்துவின் திருவுடலே கிறிஸ்தவர்களின் வாழ்வளிக்கும் அப்பமாகும். மேலும், தீவினையிலிருந்து எம் ஆன்மாவைத் தூய்மையாக்கும்படியும் வேண்டுகிறோம். ஏனெனில், வானதூதர் இடையறாது தூயவர் தூயவர் என வாழ்த்தும் தூய அப்பத்தைப் பெறுவதற்கு நாம் உண்மையாகவே தூய்மையாக இருக்க வேண்டும்.

**2.** ஆண்டவரின் செபத்தைத் தொடர்ந்து குரு தனியே தெளிவான குரலில் பின்வரும் செபத்தைச் சொல்லுவார்: "ஆண்டவரே! தீமைகள் அனைத்தினின்றும் எங்களை விடுவித்து, எங்கள்வாழ்நாளில் சமாதானத்தைக் கருணை புரிந்து அருள உம்மை மன்றாடுகின்றோம். இதனால் நாங்கள் உமது இரக்கத்தின் உதவியை அடைந்து, பாவத்தினின்று எப்போதும் விடுதலை பெற்றவர்களாய் யாதொரு கலக்கமுமின்றி சேமமாயிருப்போமாக. நாங்கள் நம்பியிருக்கும் பேரின்ப வாழ்வையும், எம்மீட்பராகிய யேசுக்கிறிஸ்துவின் வருகையையும் எதிர்பார்த்திருக்கின்றோம்."

இதற்கு மக்கள்: "ஏனெனில், அரசும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே" என்று பதிலளிப்பர். இச்செபம் ஆண்டவர் கற்பித்த செபத்தின் இறுதி விண்ணப்பத்தின்தொடர்ச்சியாக விளங்குகின்றது. தீய சக்திகளிலிருந்து விடுதலையடைந்து பாவ மாசின்றி விளங்க அருள்புரிய வேண்டுமென்று இதன்வழியாக மன்றாடுகிறோம், இச்செபத்தின் கடைசிப்பகுதியும் மக்களின் பதிலும் இனி வரவிருக்கும் எம் விண்ணுலகவழிபாட்டை நினைவூட்டுகின்றது. ஏனெனில், ஒருநாள் நாம் விண்ணுலக வழிபாட்டில் ஒன்றுகூடுவோம். கிறிஸ்துவின் மாட்சியில் பங்குபெறுவோம்.

**3. சமாதானச் சடங்கு:** முதலில் குரு தனியே தெளிவானகுரலில் சமாதானத்திற்காகப் பின்வருமாறு செபிப்பார்: "ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவே! சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கிறேன் என்று உம் அப்போஸ்தலர்களுக்குச் சொன்னீரே; எங்கள் பாவங்களைப் பாராமல் உமது திருச்சபையின் விசுவாசத்தையே கண்ணோக்கி, அதற்குச் சமாதானத்தையும் ஒற்றுமையையும் தந்தருளத் திருவுளம் கொள்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே." இதற்கு எல்லாரும் "ஆமென்" எனப் பதிலளிப்பர்.

அதன்பின் குரு மக்களைப் பார்த்து: "ஆண்டவருடைய சமாதானம் உங்களோடு என்றும் இருப்பதாக" என்று வாழ்த்துவார். மக்கள் "உம்மோடும் இருப்பதாக" எனப் பதிலளிப்பர். பின் குரு "ஒருவருக்கொருவர் சமாதானத்தை அறிவித்துக்கொள்வோம்" என்று சொல்லுவார். அப்போது மக்கள் ஒருவரொருவரைப்பார்த்துக் கைகூப்பித் [illegible] தாம் மற்றவரோடு சமாதானமாக இருக்க விரும்புவதை எடுத்துக்காட்டுவர். ஒரே அப்பமாகிய நற்கருணைவிருந்தில் பங்குபெறுபவர்களிடையே விளங்கவேண்டிய உண்மையான சமாதானத்தையும் ஒற்றுமையையும் இச்சடங்கு வெளிப்படுத்துகிறது, உண்மையிலே நாம் யாரோடாவது பகையாக இருந்தால் ஆண்டவரின் திருவிருந்தில் பங்குபெற முடியாது. எனவே, நாம் அதற்குமுன் அவர்களோடு சமாதானம் செய்து கொள்வது அவசியம்.

**4. அப்பம் பிட்கும் சடங்கு:** குரு அப்பத்தைப் பிட்டு ஒரு சிறு துண்டைத் திருக்கிண்ணத்துள் போடுவார். அவ்வேளை மக்கள் "உலகின் பாவங்களைப்போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே எங்கள்மேல் இரக்கமாயிரும்" எனும் வேண்டுதலைச் சொல்லுவர். இச்சடங்கு நீடிக்கும்வரையும் இதைமீண்டும்மீண்டும் பலமுறை சொல்லலாம். கடைசி முறையில் "எங்களுக்குச் சமாதானம் தந்தருளும்" எனக் கூறுவர். இச்சடங்கு நாம் பலராய் இருப்பினும் நற்கருணைவிருந்தில் பங்குபெறுவதன்மூலம் ஒன்றாக்கப்படுகிறோம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது (1கொரி. 10:17).

**5. திரு விருந்துக்கு ஆயத்தம்:** திருவிருந்தில் பங்குபெறத் தகுதியுடையவராகும்பொருட்டுக் குருவும் மக்களும் அமைதியாகச் சிறிதுநேரம் செபிப்பர். அதன்பின் குரு நற்கருணையைக் கையில் ஏந்தியவண்ணம் பின்வருமாறு மக்களைத் திருவிருந்துக்கு அழைப்பார்: "இதோ, சர்வேசுரனின் செம்மறி; இதோ, உலகின் பாவங்களைப் போக்குகின்றவர்; செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பெற்றவர் பேறுபெற்றோர்."

பின் எல்லாரும் ஒன்றாக ஒருமுறைமாத்திரம் பின்வரும் செபத்தைச் சொல்லுவர்: "ஆண்டவரே, தேவரீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன்; ஆனால், ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும், எனது ஆன்மா குணமடையும்."

**6. திருவிருந்து:** குரு தான் நற்கருணை உட்கொண்டபின் மற்றவர்களுக்கு நற்கருணை வழங்குவார்.

**7. திருவிருந்துப்பாடல்:** இப்பாடல் திருவிருந்தின் போது பாடப்படும்.

**8. தனிச்செபம்:** திருவிருந்தின் முடிவில் வசதியிருப்பின் சிறிதுநேரம் எல்லாரும் அமைதியாக ஆண்டவருக்கு நன்றித்துதி செலுத்தலாம். அல்லது நன்றித்துதிக்கேற்ற ஒருபாடலையோ சங்கீதத்தையோ பாடலாம்.

**9. நன்றி மன்றாட்டு:** குரு இறுதியாக அன்றைய பூசைக்குரிய நன்றி மன்றாட்டை வாசிப்பார். மக்கள் [illegible] "ஆமென்" எனப் பதிலளிப்பர்.

## IV முடிவுச் சடங்குகள்

**1. அறிவித்தல்கள்:** மக்களுக்கு ஏதாவது அறிவித்தல் கொடுக்க வேண்டியிருந்தால் இப்போது குரு அவற்றைக் கொடுப்பார்.

**2. இறுதி வாழ்த்தும் ஆசீரும்:** குரு மக்களைப் பார்த்து, "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று வாழ்த்துவார். மக்கள், "உம்மோடும் இருப்பாராக" எனப் பதிலளிப்பர். அதன் பின் குரு அவர்களை ஆசீர்வதிப்பார்.

**3. வழியனுப்புதல்:** கடைசியாகக் குரு மக்களைப் பார்த்து, "சென்றுவாருங்கள்; பூசை முடிந்தது" எனக் கூறி அவர்களை வழியனுப்புவார். அவர்களும், "சர்வேசுரனுக்கு நன்றி" எனப் பதிலளித்துவிட்டுத் தங்கள் இல்லிடத்திற்குப் புறப்படுவர். இவ்வாறு இறைவனை வாழ்த்தித் துதித்துக்கொண்டு அவர்கள் தத்தம் இல்லிடங்களில் மீண்டும் தமது நற்செயல்களைத் தொடர்ந்து செய்யப் புறப்படுவர். குருவும் பீடத்திற்கு முத்தமளித்து அதற்குரிய வணக்கம் செலுத்தியபின் பணியாளருடன் வெளியேறுவார்.



# விருந்து!

விருந்து என்றதும் இன்றைய நிலையில் பட்டினிப் பட்டாளம் பெட்டிகட்டிப் புறப்பட்டு விடுமோஎன்ற அச்சம் ஒருபுறம், தமிழர் விருந்தோம்பலை எடுத்தோதவா அல்லது நற்செய்திச் சம்பவங்களைக் கூறவா என்றஏக்கம் மறுபுறம். பண்டைய தமிழரின் விருந்தோம்பலை (இன்றைய தமிழர் அல்ல) சங்க இலக்கியங்கள் புகழ்ந்துகொண்டிருக்க அதற்குமேலும் ஒருபடி உயர்த்துவதென்றால் யாரால் முடியும்? இதிலே நான் தலையிட விரும்பவில்லை.

உணவை அடிப்படையாகக் கொண்டது தான் விருந்து. உடலை வளர்ப்பது — உறவை வளர்ப்பது விருந்து. உயர்ந்தோர், தாழ்ந்தோர், பெரியோர், சிறியோர், ஏழை, செல்வன் என்ற பேதங்களை அடியோடு அழிக்கிறது விருந்து. விருந்தும் விருந்துபற்றிய சம்பவங்களும் அதிகம் கிறீஸ்துவின் வாழ்க்கையில் நடைபெற்றிருக்கின்றன.

யேசுவின் முதற்புதுமையே ஒரு கலியாண விருந்துடன் ஆரம்பமாகிறது. அந்த விருந்தில் ஏற்பட்ட குறையைப் போக்க ஒரு புதுமை! சுவையற்ற நீர் சுவையுள்ள ரசமாக மாறியது. விருந்து பற்றிய எத்தனையோ உவமைகளையும் நமக்கு எடுத்துரைத்திருக்கிறார். ஏன் ஐந்து அப்பங்களை ஏழு அப்பங்களைப் பலுகச்செய்து திரளான சனக்கூட்டத்திற்கு மாபெரும் விருந்து நடாத்தினாரல்லவா? சீமோன்வீட்டில் நடைபெற்ற விருந்தையும் மரியமதலேனாள் பரிமளதைலம் பூசியதையும் நாம் அறிவோம்.

விருந்துக்குச் சுவையூட்டும் பொருட்களான உப்பு, புளி, கடுகு என்பவற்றைப் பற்றியும், மீன், முட்டை, அப்பம், பழம் என்பவற்றைப் பற்றியும் கூறியிருக்கிறார். இறப்பதற்கு முன்னர் மக்கள்மீது கொண்ட அணைகடந்த அன்பினால் கடைசி இராப்போசன விருந்தில் தம் உடலையும் உதிரத்தையும் உணவாக உலகோர்க்களிக்கிறார். ஆம், இது தான் பெருவிருந்து! பாவக் கறை போக்கும் அருமருந்து! மண்ணுலகோர் விண்ணுலகோர் விண்ணுலகேக வந்த விண்ணக விருந்து. உவமையாக உரைத்த உன்னத விருந்து! உலகோரை உத்தமராக்கும் பக்திவிருந்து!!

இத்தகைய சக்திதந்து முத்தியளிக்கும் உத்தம விருந்தைச் சுவைக்கக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை நாம் எத்தனையோ தடவைகளில் இழந்து விடுகிறோம். அழிந்தொழிந்து போகும் அறுசுவைவிருந்தில் அற்ப இன்பம் அனுபவிக்கிறோம். அழியாவிருந்தை மறந்து விடுகிறோம். அனுதினமும் நமது ஆலயத்தில் நடக்கும் இவ்விருந்துக்குச் சமூகமளிக்கச் சந்தர்ப்பமிருந்தும் தவறுகிறோம்.

"வானவர் வணங்கும் தூயநல் அமுதே
வாழ்வின் வழித்துணையே! —
கலங்கித் தவித்துக் கடலில் நின்றேன் —
கலங்கரை விளக்கானய்."

எமது மடமைதான் என்னே! வானதூதருக்கு முதலாய் இவ்விருந்தைச் சுவைக்கும் பாக்கியம் கிட்டவில்லை என்றால் எமக்குக்கிடைத்த பெரும் பாக்கியம்தான் எத்தகையது?

விருந்துஎன்று கூறும்போது அதிலே தனிச் சிறப்புகளும் இருக்கத்தான் செய்கிறது. ஒற்றுமை நிலவுகிறது; சமத்துவம் வளர்கிறது; வேற்றுமை உணர்ச்சி அறவே நீங்குகிறது; சோதரத்துவ உணர்ச்சி பிறக்கிறது; அனைவரும் கூடி ஒரேபந்தியில் விருந்துண்ணுகையில் இருக்கும் மகிழ்ச்சிதான் எப்படிப்பட்டது?

ஆம், அரும்பெரும் சக்தி வாய்ந்த அழியா விருந்தை அருந்துவோம். அறியாதோர்க்கும் அதன் பெருமையை எடுத்துரைப்போம். அனைவரும் அதைஅருந்த வழிவகுப்போம். வாயார வாழ்த்தி— பாவால் அதன் புகழ்பாடி— ஓயாது அதற்காராதனை புரிவோம். திருவிருந்தே! அருமருந்தே!! எமக்கு நல்விருந்தானய்!

— இ. பேர்ணட் —

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**கார்த்திகை — 1969**

| | | | |
|---|---|---|---|
| 9 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 24-ம் ஞாயிறு | [ப] |
| 10 | திங்கள் | புனித பெலவேந்திரர் | [வெ] |
| 11 | செவ்வாய் | புனித மார்த்தீன் | [வெ] |
| 12 | புதன் | புனித மாட்டீன் | [சி] |
| 13 | வியாழன் | புனித திதாக்குஸ் | [வெ] |
| 14 | வெள்ளி | புனித யோசப்பாத் | [சி] |
| 15 | சனி | மாதாவின் நாள் (புனித ஆல்பர்ட்) | [வெ] |

# காவலன் கருத்து

## வண. சாள்ஸ் மத்தியூஸ் சுவாமியார்

காலங்கண்ட குரவர்திலகமாய், பெருங் கல்வி மானுய், கண்ணியமிக்க பேரறிஞராய், சம்பத்திரிசியார் கல்லூரியின் பிரதாபம்வாய்ந்த முன்னுள் அதிபராய், இயல்பிலேயே தமக்குண்டான மதியூகத்தாலும், பெரியோர் சகவாசத்தாலும், எவரையும் தம்பால் ஈர்ந்துகொள்ளும் வசீகரதோற்றத்தாலும், எக் கருமத்தையும் சீராய் ஆற்றிவைக்கும் தீரத்தாலும் மிக்கான கீர்த்திபெற்றவராய் நம்மத்தியிலே கடந்த 66 வருடங்களாகப் பல்வேறுதுறைகளிலும் அரும் பணி செய்துவந்த வண. சாள்ஸ் மத்தியூஸ் சுவாமியாரின் மறைவு, எதிர்பார்க்கப்பட்டதாக இருந்தாலும், நம்மெல்லோரையும் ஆருத்துயரத்தில் அமிழ்த்தி விட்டது.

சுவாமியார் எமது செல்வநாடாகிய யாழ்ப்பாணத்தில் 1903-ம் ஆண்டு ஆவணிமாதம் 6-ம் திகதி கால்வைத்தார். அன்றுமுதல் இன்றுவரை அவர் ஆற்றின பாராட்டத்தக்க சமய, சமூக, கல்வி, கலாசாரத் தொண்டுகள் பொன்அட்சரங்களால் பொறிக்கப்படத்தக்கன. அவர் கல்லூரித் தலைவராக நியமனம் பெற்றபின் கல்லூரியின் விருத்திக்கும், மாணவரின் கல்வி விருத்திக்கும், நல்லொழுக்கத்துக்கும், ஞானவளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்குமாகச் செய்துவைத்த சிறந்த சேவைகள் எண்ணுக்கடங்கா. கட்டட வனப்பிலோ, கல்விவளத்திலோ, நல்ல பெயரிலோ சம்பத்திரிசியார் கல்லூரி இன்று எய்தியிருக்கும் மகத்தான நிலைக்குச் சுவாமியவர்களும் ஒரு முக்கிய காரணர். அவரிடம் கல்விகற்ற 50,000-க்கு மேலான மாணவர்கள் தங்கள் பண்பாடுகளாலும், கல்வி மேம்பாடுகளாலும், காரியத்திறமைகளாலும் இலங்கையின் அகிலபகுதிகளிலும், பிறதேசங்களிலும் தங்கள் கல்லூரிக்கும் மத்தியூஸ் சுவாமியாருக்கும் மங்காப் புகழை ஈட்டிக் கொடுத்து வருகின்றார்கள்.

தமது குருத்துவ சீவியத்தின் முழுப்பகுதியையும் நமது மக்களின் நன்மைக்காகச் செலவிட்டு, நமது சுபீட்சமும் நல்வாழ்வுமே தமது சுபீட்சமும் நல்வாழ்வுமாகக் கருத்திற் கொண்டிருந்து, தமது அந்திய காலத்திலும் கல்லூரித்தொண்டில் ஈடுபட்டு வந்து, கடைசியாகத் தமது காயத்தையுமே நமது மண்ணுக்கு அர்ப்பணஞ்செய்த இந்த அரிய பெரிய குரவரை நாம் எவ்வாறு மறக்கமுடியும்?

சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

## அரசியல் கருமமும் எமது பங்கே

யேசுசபைத் தலைவர் அதி வண. பேட்று அருப்பே அடிகளார் தமது சபைச் சந்நியாசிகளுக்கு அண்மையிற் கூறிய புத்திமதிகளுள் ஒன்று அவர்கள் அரசியல் கருமங்களில் கவனம் செலுத்துவது பிழையெனக் கருதப்படாதென்பதே. அரசியலானது சமூக நீதியைத் தாக்குமானால் தைரியமாக அந்த அநீதிகளை எடுத்துக்காட்டிச் சனநாயக முறையின்படி அவற்றைத் திருத்தி வைக்கத் தயங்க வேண்டாமென அவர்களுக்குப் புத்தி புகட்டியிருக்கின்றார்.

(5ஆம் கலத் தொடர்ச்சி)

பர்கள் திவ்விய பூசைப்பலி வேளையில் தம் அன்பின் கிறீஸ்துவை வானலோகத்திலிருந்து வரவழைத்து தாமும் அவரை உட்கொண்டு அவருடன் ஒன்றித்து விசுவாசிகளுக்கும் அவரைப் பகிர்ந்தளிக்க வரமாட்டாரா?

# விரத்தத்துவம் என்னும் தூய கன்னிமை

இத் தூய்மையான புனிதமான வாழ்வை உலகம் மதிக்கிறது. இறைவனே விரும்புகிறார். எனவே சிலர் தம்மை மறந்து, இறைவனிடத்துக் கொண்ட தனி அன்பால், இறைவனைத் தம் உள்ளத்தில் இருத்தி, இறைபணி புரிவதற்கென இத் தியாக புனித வாழ்வைத் தெரிந்துகொள்கின்றனர். இதில் ஆண், பெண் பாலாராகிய இரு பகுதியினருமே சம உரிமை பாராட்டி மூழ்கிக்கொள்கின்றனர். இவ்வுரிமையை எத் தேசத்தவனும், எச் சாதியினனும், எச் சமயத்தவனும் பாரபட்சமின்றி அனுசரிக்க முன் வருகின்றான். சமயத்தளவில் கத்தோலிக்க கிறீஸ்தவ சமயத்தவரே இவ் விஷயத்தில் விசேஷ இடம் பெறுகின்றனர். ஏனெனில் உலகமடங்கலும் கத்தோலிக்க கிறீஸ்தவ, குருத்துவ, சந்நியாச, கன்னியர் மடங்கள் ஆயிரக்கணக்காகப் பெருகி, குருக்களையும், சந்நியாசர், கன்னியரையும் உருவாக்கி, உலகின் கோடிக்கணக்கான மக்களுக்கு ஆன்ம சரீர நலன்களைப் புரிவது யாவரும் அறிந்த விஷயம். இச் சந்நியாச சபைகளில் அதிகம் போற்றற்குரியது குருத்துவத் தொழிலை நடத்தும் விரத்தர்களை உருவாக்கும் சபையே. நம் மீட்பர் கிறீஸ்து, திருச்சபையை ஆரம்பித்தகால முதல், இக்குருத்துவவிரத்தத்துவமே முதலிடம் வகித்து வந்தது. கிறீஸ்துநாதரின் பிரிய சீடராகிய புனித அருளப்பர், தெய்வீக அன்பராம் கிறீஸ்துவின் மார்பில் சாய்ந்து, அவரால் அரவணைக்கப்படும் பாக்கியம் பெற்றதற்கும் காரணம் இப் புனித விரத்தத்துவமே. அவர் வாலிப வயதில் கிறிஸ்துவை அறிந்தார், நேசித்தார்; அளவு கடந்து நேசித்தார். அதனால் இவ்வுலக சிற்றின்பங்கள் அனைத்தையும் அப் பேரின்ப சிநேகத்தின் நிமித்தம் அகற்றிவிட்டு, அவ்வன்பின் தெய்வத்துக்குச் சேவைசெய்யத் தம்மை அர்ப்பணித்தார்.

கிறீஸ்துவால் அழைக்கப்பட்ட புறஜாதியாரின் அப்போஸ்தலரான பரிசுத்த சின்னப்பர், அறிவு, அழகு, திறமை, மதிப்பு, பெருந்தன்மை எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவர், இரத்தம் துளிர்க்கும் வாலிப வயதுடையவர். எப்போ கிறீஸ்துவால் அழைக்கப்பட்டாரோ, எப்போ மனந்திரும்பி, கிறீஸ்துவர்களைத் துன்பப்படுத்துவதை விடுத்து, கிறீஸ்துவுக்கு தூய பிரஜைகளை ஆயத்தப்படுத்தத் தீர்மானித்தாரோ, அன்றே தமது உடல், பொருள், ஆவி எல்லாம் இறைவனுக்கே அர்ப்பணித்து, விரத்தத்துவ விரதம் பூண்டு பூரண துறவியானார். இறைபற்று இதயத்தில் பூரணமாக இடம்பெறும்போது, சிற்றின்ப நாட்டத்தை வெறுக்கிறான் மனிதன். பரிசுத்த சின்னப்பர் இதைப்பற்றித் தமது நிருபங்களில் வெகு விளக்கமாக எழுதுகிறார். அதாவது இறைபணிக்குத் தங்களை அர்ப்பணித்தோர் விவாகம் செய்யாது இருப்பது மிக மேலான புண்ணியமென்கிறார். ஏனெனில், (1-ம் கொரி. 7-ம் அதி. 32—33ஆம் வசனம்) மனைவி இல்லாதவன் ஆண்டவருக்கு எப்படிப் பிரியப்படலாமென்று கர்த்தருக்குரியவைகளின்மேல் கவலையுற்றிருக்கிறான். மனைவியோடிருக்கிறவனோ, தன் மனைவிக்கு எப்படிப் பிரியப்படலாமென்றும், உலகத்துக்குரியவைகளில் கவலையுற்று இருமனப்பட்டிருக்கிறான். என்கிறார். 7-ம் அதி. 8ம் வசனத்தில் நான் இருப்பதுபோல் மற்றும் தேவ ஊழியரும் இருந்துவிட்டால் மிகு நலமாயிருக்கும் என்றும் எழுதியிருக்கிறார். நமது அன்பின் மீட்பரும், "ஒருவன் என்னைப் பின்செல்ல விரும்பினால் தன்னைத்தான் வெறுத்து, என் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லக் கடவான்" என்கிறார். எமது அன்னையாகிய திருச்சபையும் இவ்வாக்குகளைச் சிரமேற்கொண்டு, தனது புனித சேவையால் எவ்வளவு தூய்மையான பணியை இறைவனுக்குச் செய்ய முடியுமோ அவ்வளவு தூய்மையாகப் பணிசெய்து இறைவனை மகிமைப்படுத்த முன் நிற்கிறது. இதனாலேயே யார், யார் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து, அவரின் அன்புக்காகத் திபாக சேவைசெய்ய முன் வருகிறார்களோ, அவர்களை ஞான அறிவில் வளரச்செய்து ஒரு பூரண துறவியாக, வேறொரு கிறீஸ்துவாக மாற்றி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்ற உலக மக்களிடையே அனுப்புகிறது. இக் குருக்கள், இத் தூய விரத்தத்துவத்தைப் பூண்டு, கிறீஸ்துவின் ஊழியராகி, குருத்துவம் என்னும் அழியாத ஞான முத்திரையால் முத்திரிக்கப்படும் போது இவர்களை வானலோகம்மட்டாய் அல்ல, விண்ணரசன் செம்மறிப்புருவையானவர் செல்லும் இடம் எல்லாம் சென்று கிறீஸ்துவின் இதய மணவாட்டிகளாக அணிவகுத்துச் செல்லக்கூடிய பாக்கியம் பெறுகிறார்கள். இவர்களைப்பற்றிக் காட்சியாகமத்தில் மிக அழகாகத் தான் கண்ட காட்சியை வர்ணிக்கிறார் பரிசுத்த சின்னப்பர். (காட். ஆக. 14-ம் அதி. 2-ம், 3ம், 4-ம் வசனம்) "நான் கேட்ட அந்தச் சத்தம் சுரமண்டலக்காரர் தம் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போன்றிருந்தது. அவர்கள் சிங்காசனத்துக்கு முன்பாகவும், வயோதிபருக்கு முன்பாகவும், ஒரு புதுப்பாட்டைப் பாடிக்கொண்டிருந்தனர். அந்தப் பாட்டைப் பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளபபட்ட லட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்தவிர வேறெவனும் பாடக்கூடாமல் இருந்தது. ஸ்திரிகளோடு தங்களை அசுத்தப்படுத்தாதவர்கள் இவர்களே! ஏனெனில் இவர்கள் கன்னியர்கள்; செம்மறிப்புருவையானவர் போகும் இடங்கள்தோறும் அவரைப் பின்செல்பவர்கள் இவர்களே." இவர்கள் சருவேசுரனுக்கும், செம்மறிப்புருவையானவருக்கும் முதற்பலனை மனிதரிடம் இருந்து மீட்டுக்கொள்ளப் பட்டவர்கள்.

இவர்களுக்கு வேண்டிய வணக்கத்தையும, கீழ்ப்படிவையும், மரியாதையையும் காட்ட வேண்டும் என்றும் பரிசுத்த சின்னப்பர் உரோமர் 13ஆம் அதி. முதல் ஏழு வசனங்களிலும் மிகு நியாயத்தோடு எடுத்துரைக்கிறார். "எந்த மனிதனும் மேலான அதிகாரத்துக்குப் பணிந்து நடக்கக் கடவான். சருவேசுரனாலே உண்டாகாத அதிகாரமில்லை. அதிகாரத்தை எதிர்ப்பவன், சருவேசுரன் ஸ்தாபித்த ஏற்பாட்டை எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்க்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினைத் தீர்வையை வருவித்துக்கொள்கிறார்கள். அன்றியும் அதிகாரிகள் நன்மை செய்கிறவர்களுக்கல்ல, தின்மை செய்கிறவர்களுக்கே, பயங்கரத்துக்கு உரியவர்களாய் இருக்கிறார்கள். நீ அதிகாரத்துக்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால் நன்மையைச் செய். புகழ்ச்சி அடைவாய். ஏனெனில அவன் உன் நன்மைக்காகவே தேவ ஊழியனாய் இருக்கிறான். ஆனால் நீ தின்மைசெய்தால் அச்சத்தோடிரு. ஏனெனில் அவன் பட்டயத்தை விருதாவில் ஏந்திக்கொண்டிருக்கிறவனல்ல. அவன் தேவ ஊழியன். கெடுதி செய்கிறவனை அவன் கோபத்தோடு பழிவாங்குபவன். ஆகையால் நீங்கள் கோபாக்கினையின் நிமித்தம் அல்ல மனச்சாட்சியின்நிமித்தம் அவசியம் பணிந்திருங்கள். இதற்காகவே நீங்கள் பகுதியும் செலுத்தி வருகிறீர்கள்" என்று இப்படியேதொடர்ந்து விரத்தத்துவ குருமாரைப்பற்றி வர்ணிக்கிறார் இவ் வாக்கியங்களினால் நல்ல பிதா தம்நிமித்தம் தியாகம்செய்பவர்களுக்கு கொடுத்திருக்கும் வல்லமை, தேவ வரம் எவ்வளவென்று புலனாகிறது இத் தூய குருமாரை கிறிஸ்துநாதர் தம் கடைசி இராப்போசனவேளையில் இனிமேல் நீங்கள் என் ஊழியர் அல்ல; நண்பர்கள் என்று அழைக்கிறார். இவ்வுத்தம நண்

(2-ம் கலம் பார்க்கவும்]

— நாதன் —

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெரு [illegible] உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ கார்த்திகைமீ 8ஆம் உ சனிக்கிழமை அச்சி[illegible]க் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org